4. அறிக்கைகள் அளித்தல்-தொடர்ச்சி

(அ) பொதுக் கணக்குக் குழு--தொடர்ச்சி

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 121 முதல் 124 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி. (குறுக்கீடுகள்)*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 70 முதல் 72 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

2. அறிவிப்புகள்--தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள்*

2003 ஜனவரி 29] [பேரவைத் தலைவர்]

மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்--தொடர்ச்சி

(அ) 28-1-2003-ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகளை நீக்கியது--தொடர்ச்சி

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று, அவர்கள் இருக்கைகளை விட்டு வந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், தங்கள் இருக்கைகளுக்குச் சென்று அமரும்படி எவ்வளவு கேட்டுக் கொண்டபோதிலும் அவர்கள் அதற்குச் செவி சாய்க்கவில்லை; அவை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடைபெறவிடாமல் அவர்கள் தடுத்துக்கொண்டே இருந்ததால்தான் பேரவைத் தலைவர் அவர்கள் அவையை ஒத்திவைத்துவிட்டு, நாளை கூடும் என்று அறிவித்துவிட்டுச் சென்றுவிட்டீர்கள்.

இன்றையதினம் மீண்டும் அதே நடவடிக்கைகளில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து அவர்கள் எழுந்து நின்று, சத்தம் போட்டுக் கொண்டு, அவையின் அலுவல்களை நடைபெறவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அமர்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் அமர்ந்தவுடன், மீண்டும் எழுந்து நிற்பார்களோ, சத்தம் போடுவார்களோ, என்னவோ தெரியாது. ஆகவே, நேற்றையதினம் காவலர்களைக் கூப்பிட்டு, அவர்களை வெளியேற்றும்படிச் செய்திருந்தால், இன்றையதினம் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக, 'குண்டுக் கட்டாக தி.மு.க. உறுப்பினர்களைத் தூக்கிச் சென்று காவலர்கள் வெளியேற்றினார்கள்' என்று செய்திகள் வந்திருக்கும். அதைத் தவிர்ப்பதற்காகத்தான் நேற்று நீங்கள் அவையை ஒத்திவைத்திருக்கிறீர்கள். ஆனால் இன்றையதினம், அதே பாணியை எதிர்க்கட்சியினர் கடைப்பிடித்தால், ஒன்று, தாங்கள் அவர்களை வெளிநடப்புச் செய்யும்படிக் கேட்டுக்கொள்ளலாம்; அல்லது அவையின் அலுவல்கள் அமைதியான முறையில் நடைபெற வேண்டுமானால், அவர்களை வெளியேற்றுவதைத் தவிர வேறு வழி இருக்காதுபோல் தெரிகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

[2003 ஜனவரி 29

(தி.மு.க. உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கை அருகில் வந்து நின்று கொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், அவை அலுவல்கள் நடைபெறுவதற்கு தயவுசெய்து ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) நேற்றைய பிரச்சினை நேற்றோடு முடிந்தது. மறுபடியும் அதைக் கிளப்பாதீர்கள். வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-- தொடர்ச்சி

(அ) தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச் சட்ட முன்வடிவு, 2003--தொடர்ச்சி

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

(தி.மு.க. உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கை அருகில் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

2003 ஜனவரி 29]

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

2. அறிவிப்புகள்--தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

(தி.மு.க. உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கை அருகில் நின்றுகொண்டு தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்)

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS